සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික , ක්ෂුද්‍ර මූල්‍ය , ස්වයං රැකියා හා ව්‍යාපාර සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார,நுண்நிதிய, சுயதொழில்,மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment and Business Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/09/CBO/சுற்றறி | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ............................ | දිනය<br>திகதி<br>Date | 2021.01.29 |

சகல
மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
மாவட்ட சமுர்த்தி பிரதி/உதவி பணிப்பாளர்கள்,
சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,
சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்.

| | |
|---|---|
| **சமுர்த்தி சுற்றறிக்கை – 2018/14/சமுதாய அடிப்படை/08/2018/03** | **பிற்சேர்க்கை – 01/2021** |

## சமுர்த்தி மக்கள் பயிற்றுனர்கள் ஊடாக சமுர்த்திப் பயனாளிகளை விளக்கமளித்தல்

### 01. அறிமுகம்

1.1 சமுர்த்தி மக்கள் பயிற்றுனர்கள் மூலமாக சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் மக்கள் தலைவர்கள் மற்றும் சமுர்த்திப் பயனாளிகளை விளக்கமளிப்பதற்குரியதாக 2018-12-10ம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட மேற்படி இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முதலாவது பிற்சேர்க்கையாக இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

1.2 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்பினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை முறையான பிரகாரம் பதிதல் மற்றும் நிதித் தகவல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் சமுதாய அடிப்படை அமைப்புத் தலைவர்களை விளக்கமளிக்கும் பொருட்டு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இச் சுற்றறிக்கை மூலம் வழங்கப்படுகின்றது.

### 02. சமுர்த்தி மக்கள் பயிற்றுனர்களை தெரிவு செய்தல்

சமுர்த்தி சுற்றறிக்கை 2020/10/சமுதாய அடிப்படை/12/2020/03 இன் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பினால் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களை பதிதல் மற்றும் நிதித் தகவல் கூற்றினைத் தயாரிக்க வேண்டிய விதம் தொடர்பில் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் மூலம் மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொண்ட மக்கள் பயிற்றுனர்கள் இந்த விளக்கமளித்தலின் பொருட்டு தெரிவு செய்துகொள்ளப்படல் வேண்டும்.

### 03. சமுர்த்தி மக்கள் பயிற்றுனர்கள் மூலம் விளக்கமளிக்கும் பட்டறையினை நடாத்துதல்

3.1 Covid – 19 வைரஸ் பரவுவதனைக் கவனத்திற் கொண்டு சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய 10 சமுதாய அடிப்படை


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 288772** |
| | | **Hot Line :0112-889007** | | | |

அமைப்புக்களை மாத்திரம் ஒரு விளக்கமளிக்கும் பட்டறையின் பொருட்டு அழைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

3.2 ஒரு சமுதாய அடிப்படை அமைப்பு ஒன்றிலிருந்து அதன் கௌரவ தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் கௌரவ உள்ளகக் கணக்காய்வாளர்கள் மாத்திரம் இந்த பட்டறையின் பொருட்டு அழைக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் ஒரு பட்டறைக்கு 40 மட்டளவிலான மக்கள் தலைவர்களை வரவழைக்க முடியும்.

3.3 ஒரு விளக்கமளித்தல் பட்டறைக்காக வளவாளர் பங்களிப்பினை வழங்கும் சமுர்த்தி மக்கள் பயிற்றுனர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூபா 1000/= விற்கான கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்படுவதுடன் இரு பயிற்றுனர்கள் மூலம் ஒரு பட்டறையின் பொருட்டு வளவாளர் பங்களிப்பினை வழங்குவது தொடர்பில் அப் பயிற்றுனர்களுடன் கலந்தரையாடி சமுர்த்தி பிரதேச அமைப்பினால் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.4 விளக்கமளிக்கும் பட்டறையின் பொருட்டு ஒரு சமுதாய அடிப்படை அமைப்பு தலைவர் ஒருவருக்குத் தேவையான எழுதுகருவிகள் செலவாக ரூபா 50/= இற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டியதுடன் உபசரணைச் செலவுகளை பிரதேச அமைப்பினால் தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும்.

3.5 மேலே குறிப்பிடப்பட்ட சகல செலவுகளும் உள்ளடங்குகின்ற பிரகாரம் சமுர்த்தி பிரதேச அமைப்பினால் தீர்மானிக்கப்படுகின்ற '' பயிற்சிப் பட்டறை கட்டணம்'' சமுதாய அடிப்படை அமைப்பினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அச் செலவினை சமுர்த்தி பிரதேச அமைப்பிற்கு ஒரே தடவையில் செலுத்த வேண்டியதுடன் அதனை சமுதாய அடிப்படை அமைப்பின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்காக உரிய மூல ஆவணங்களிலும் பொழிப்பேட்டிலும் உரிய பக்கங்களில் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பதிதல் வேண்டும்.

3.5.1 **வங்கியேடு அல்லது காசேடு - பற்று (மீளப்பெறல😉 நிரல் அல்லது கொடுப்பனவுநிரல்**
**செலுத்திய பயிற்சிக் கட்டணம் (செலவுகள்) - முதலாம் நிரல்**

3.6 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பிலிருந்து சமுர்த்தி பிரதேச அமைப்பிற்கு கிடைக்கப்பெறும் பயிற்சிப் பட்டறைக் கட்டணம் பிரதேச அமைப்புக்கு வருமானம் ஒன்றாகும் என்பதுடன் பயிற்சிப் பட்டறையின் பொருட்டு செலவிடும் தொகையானது செலவொன்றாகும். அதனை பிரதேச அமைப்பின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு உரிய அடிப்படை ஆவணங்களிலும் கொடுக்கல் வாங்கல் பொழிப்பேட்டிலும் உரிய பக்கங்களில் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**3.6.1 வங்கியேடு அல்லது காசேடு - வைப்புநிரல் அல்லது கிடைப்பனவு நிரல்**
**கிடைத்த பயிற்சிக் கட்டணம் (வருமானம்)- இரண்டாம் நிரல்**

**3.6.2 வங்கியேடு அல்லது காசேட்டில் - பற்று (மீளப்பெறல்) அல்லது கொடுப்பனவு நிரல்**
**பயிற்சிப் பட்டறையின் பொருட்டான நானாவித செலவுகள் - முதலாம் நிரல்**

3.7 பயிற்சியின் பொருட்டு அழைக்கப்படும் சமுதாய அடிப்படை அமைப்புத் தலைவர்களுக்கு இணைப்பு **CBO- 1/2021-01** இல் குறிப்பிட்டுள்ள பயிற்சியின் பிரகாரம் இணைப்பு **CBO – 1/2021-02** இல் குறிப்பிட்டுள்ள மாதிரிக் தீர்வுகளை அடிப்படையாகக் கொண்டு மக்கள் பயிற்றுனர்களால் பயிற்சியினை வழங்குதல் வேண்டும்.

3.8 சமுர்த்தி சுற்றறிக்கை 2018/14/சமுதாய அடிப்படை/08/2018/03 இன் பந்தி இலக்கம் 2.4 இல் குறிப்பிடப்படும் ''மக்கள் பயிற்சி கண்காணிப்புக் குழுவினால்'' இப் பயிற்சிப் பட்டறை சகலதையும் நடாத்தும் போது கண்காணிக்க வேண்டியதுடன் அக் கண்காணிப்புக்

குழுவில் ஆகக் குறைந்தது ஒரு சமுர்த்தி முகாமையாளராவது உள்ளடங்குகின்ற பிரகாரம் மூன்று அங்கத்தவர்கள் இருத்தல் வேண்டும்.

3.9 சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவாகியுள்ள மற்றும் பதிவினை வருடாந்தம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள மாவட்டத்தில் உள்ள சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்கு இப் பயிற்சியினை வழங்க வேண்டியதுடன் உரிய விதத்தில் செயற்படுவதனை ஆராய்ந்து பார்க்கும் மற்றும் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கும் பொறுப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர்/ சமுதாய அடிப்படை அமைப்பு விடயப் பொறுப்பு சமுர்த்தி முகாமையாளர்/ கணக்காய்வு முகாமையாளர் மற்றும் கன்காணிப்பு முகாமையாளருக்கு ஒப்படைக்கப்பட்டுகின்றது.

## 4. பயிற்சிப் பட்டறைகளுக்குரிய அறிக்கையிடல்கள்

4.1 சமுர்த்தி சுற்றறிக்கை 2018/14/சமுதாய அடிப்படை /08/218/03 இல் பந்தி இலக்கம் 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையினை பிரதேச சமுர்த்தி முகாமையாளரால் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4.2 சமுர்த்தி சுற்றறிக்கை 2018/14/சமுதாய அடிப்படை /08/218/03 இல் பந்தி இலக்கம் 5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையினை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளரால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

## 05 விளக்கப்படுத்திக் கொள்ளல்

5.1 இணைப்பு **CBO – 1/2021-01** இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பயிற்சிகள் மற்றும் இணைப்பு **CBO – 1/2021-02** இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரித் தீர்வு இப் பயிற்சிப் பட்டறையினை நடாத்தும் பொருட்டு மாத்திரம் சமுர்த்தி பிரதேச அமைப்பு மட்டத்தில் அச்சிட்டுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் நீண்ட கால பாவனையின் பொருட்டு மாதிரிப் படிவத்தினை அச்சிடல், அச்சிடப்பட்ட புத்தகங்களை கொள்வனவு செய்தல் அல்லது அப் புத்தகங்களை பயன்படுத்தும் பொருட்டு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

5.2 குறித்த பயிற்சியின் பின்னர் 2021 ஜனவரி 01ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பினால் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் நிதித் தகவல்களை சமர்ப்பிக்கும் முறையினை பயன்படுத்த வேண்டியதுடன் அதன் பொருட்டு சமுர்த்தி சுற்றறிக்கை 2021/10/சமுதாய அடிப்படை/12/2020/03 இல் குறிப்பிடப்படும் படிவங்களுக்கு ஏற்றவாறு அப்பியாசக் கொப்பி, சீ.ஆர் புத்தகங்களில் பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அங்கு சுற்றறிக்கைகளின் இணைப்ப இலக்கம் CBO – 12/01, CBO – 12/02 மற்றும் CBO 12/03 (பிரதியுடன்) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் பிரதேச அமைப்பு மட்டத்தில் அச்சிட்டு சமுதாய அடிப்படை அமைப்புக்கு விற்பனை செய்து விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

5.3 இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவுப் பொறுப்பு பணிப்பாளரை தொடர்புகொள்ளவும்

(தொலைபேசி இலக்கம் : 011-2879773 / 071-4118226, தொலைநகல் - 0112873794)

ஆர்.பீ..பி.திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 01. செயலாளர் - நிதி அமைச்சு<br>02. செயலாளர் - சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | } | த.கூ.க.பொருட்டு |
| 03. பணிப்பாளர் - குறுநிதி<br>04. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்<br>05. சகல பிரிவுத் தலைவர்கள் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | } | உ.ந.பொருட்டு |

TRANSLATED BY – M.M.M.JAWHAR (Translator)